**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 742/2025 PW- 1**

Name : Saravanan
Father / Husband name : Kasi
Village : Aakoor
Age : 28

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.03.2025.

A1 to A3 present. Defence Counsel present. APP absent. Witness identified by HC 1967.

**முதல் விசாரணை**

நான் 108 ஆம்புலன்ஸின் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். சாட்சி தமிழ்செல்வன், பிரசாந்த் எனது பக்கத்து வீட்டுகாரர்கள். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு இரவு 08.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது பக்கத்து வீட்டின் பையன் தமிழ்செல்வன் பால் ஊற்றிவிட்டு அவரது வீட்டிற்கு வந்த போது எதிரிகள் மதுபோதையில் தமிழ்செல்வனிடம் என்ன ரௌடிஸ்சம் செய்கிறார், எதற்கு எவ்வளவு வேகமாக வாகத்தை ஓட்டுகிறாய் என்று கேட்டார்கள். எதிரிகள் விஷால், ரஞ்ஜித் ஆகியோர்கள் தமிழ்செல்வனை அசிங்கமாக திட்டினார்கள். தமிழ்செல்வன் விஷாலை கையால் தலையில் அடித்தார். இருதரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டது நானும், பிராசந்தும் சென்று சண்டையை மறித்துவிட்டோம். எதிரி ரஞ்ஜித் என்பவர் வீட்டிற்கு சென்று பேனா கத்தி எடுத்துவந்து எனது இடதுபக்க நெற்றியில் குத்தினார். எனது மாமா பிராசந்த் என்னை மண்ணம்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு எனக்கு நெற்றியில் இரண்டு தையல்கள் போட்டார்கள். அதன் பின்னர் மறுநாள் காலை 10.00 மணியளவில் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனுவை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். (**அந்த புகார் மனு அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

24.10.2024 அன்று மாலை 07.30 மணியளவில் 1 வது எதிரி விஷால் மற்றும் தமிழ்செல்வன் ஆகியோர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போது சமாதானத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு நடந்த வாய்தகாரரில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 742/2025 PW- 2**

Name : Tamilselvan
Father / Husband name : Elumalai
Village : Aakoor
Age : 23

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.03.2025.

A1 to A3 present. Defence Counsel present. APP absent. Witness identified by HC 1967.

**முதல் விசாரணை**

நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 சரவணன் என்பவரை எனக்கு தெரியும். சாட்சி பிரசாந்த் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பாக இரவு 07.00 மணியளவில் நான் பால் ஊற்றி விட்டு எனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்த போது எனது வீட்டின் அருகே எதிரி விஷால் என்னை வழி மறித்து என்னை தகாத வார்த்தைகளால் ஓத்தா, ஓம்மா என்று திட்டினார். நான் கையால் எதிரி விஷாலை அடித்தேன். இந்த சம்பவத்தால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)**

சம்பவ சமயத்தில் எனக்கும் விஷாலுக்கும் சண்டை நடந்துக்கொண்டு இருந்த போது சாட்சிகள் சரவணன், பிராசந்த் ஆகியோர்கள் சண்டையை மறித்துவிட்டார்களா என்றால் ஆமாம், மறித்துவிட்டார்கள். அந்த சமயத்தில் சரவணனுக்கு காயம் ஏற்பட்டதாக என்றால் இல்லை. எதிரி விஷாலுடன் வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது கடந்த 24.10.2024 அன்று இரவு 07.30 மணிக்கு நான் எனது வீட்டின் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரிகள் என்னை வழிமறித்து

தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், சண்டையை மறிக்க வந்த சரவணனை எதிரி ரஞ்ஜித் கையில் வைத்திருந்த சிறிய கத்தியால் சரவணனின் இடதுபக்க கண் அருகே குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், எதிரிகள் விக்னேஷ் மற்றும் விஷால் ஆகியோர் சரவணனின் கைகளை பிடித்துக்கொள்ள ரஞ்சித் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்று போலிசார் என்னை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 742/2025 PW- 3**

Name : Prasanth
Father / Husband name : Murugesan
Village : Aakoor
Age : 28
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.03.2025.

A1 to A3 present. Defence Counsel present. APP absent. Witness identified by HC 1967.

**முதல் விசாரணை**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 சரவணன், அ.சா. 2 தமிழ்செல்வன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பாக இரவு 08.00 மணியளவில் தமிழ்செல்வன் அவரது வீட்டின் அரு இருசக்கர வாகனத்தில் வந்த போது எதிரிகள் ரஞ்சித், விஷால், விக்னேஷ் ஆகியோர் தமிழ்செல்வன் வீட்டின் அருகே அமர்ந்திருந்தார்கள். எதிரி விஷால் தமிழ்செல்வனின் இருசக்கர வாகனத்தை வழி மறித்து தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். நானும், சரவணனும் சமாதானம் படுத்தி அவர்களை வீட்டிற்கு அனுப்பினோம். எதிரி ரஞ்சித் தமிழ்செல்வனை பார்த்து அசிங்கமாக பேசினார். நாங்கள் எதிரி ரஞ்சித்தை சமாதானம் படுத்தி அனுப்பினோம். எதிரி ரஞ்சித் அவரது வீட்டிற்கு சென்று காய் வெட்டும் கத்தி எடுத்து வந்து சரவணனின் இடது பக்க நெற்றியில் கண் அருகே வெட்டினார். அதில் சரவணனுக்கு இரத்த காயம் ஏற்பட்டது. மண்ணம்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சரவணனை சிகிச்சை அழைத்து சென்றேன். சம்பவம் தொடர்பாக அ.சா. 1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டின் அருகே 1 வது எதிரி விஷால், அ.சா. 1 சரவணன், அ.சா. 2 தமிழ்செல்வன் ஆகியோர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு நடந்த வாய்தகாரரில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.